அ.வ.எண்: 105/2020 நாள்:15.03.2024

வா.சா.2 . குமார்

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) எனக்கு தற்போது வயது 48 என்றால் சரிதான். கூழப்பஉடையர், லெட்சுமணஉடையார் மற்றும் தங்கையாஉடையாரை தெரியாது என்றால் என் காலத்திற்கு 100 வருடத்திற்கு முன்பு உள்ளவர்கள். லெட்சுமணஉடையாருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் தெரியாது. தங்கையா உடையாருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் எனக்கு தெரியாது. அவர்களுக்குள் பாகபிரிவினை செய்த கொண்டார்களா இல்லையா என்பது எனக்கு தெரியாது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் பாகபிரிவினை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். மேற்கூறிய 3 நபர்களுக்கும் எவ்வளவு வாரிசு தாரர்கள் உள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2) எதன் அடிப்படையில் எழுத்து பூர்வமாக பாகம் வைத்து கொண்டார்கள் என்று நான் கூறியுள்ளேன் என்றால் அது மாதிரி நான் சொல்லவில்லை. பாலகிருஷ்ணன் அப்பா பாகபிரிவினை செய்து கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. VAO அலுவலகம் சென்று வழக்கின் விவரங்கள் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சர்வே எண்கள் பாலகிருஷ்ணன் சொல்லி கொடுத்து நான் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை எனக்கு சர்வே எண் தெரியும். வெளி நபர்களின் சர்வே எண்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சர்வே எண்ணுக்கு அருகில் என் நிலம் உள்ளதா என்றால் இல்லை.

3) பாலகிருஷ்ணன் உறவினர் என்பதால் அவர் வழக்கறிஞருக்கு கொடுத்த தகவலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட பிரமாணவாக்குமூலத்தில் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிச்சையஉடையார் மகன் தான் 1 ஆம் பிரதிவாதி என்றால் ஆமாம். மேற்படி நபருக்கு பரமசிவம் என்ற குழந்தை உள்ளதா என்றால் இல்லை. வேறு யாராவது பிச்சையா உடையார் என்று உள்ளரா என்றால் எனக்கு தெரியாது. 1 முதல் 3 பிரதிவாதிகள் அவர்களுக்குரிய ஆவணங்களில் தான் செட்டில்மென்ட் ஆவணம் தயார் செய்துள்ளார்கள் நான் வாதி சொல்லி கொடுத்தபடி பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணை

வாக்குமூலத்தில் வாதி பாலகிருஷ்ணன் 86 செண்ட்ம் முருகானந்தம் என்பவருக்கு 86 செண்ட்ம் 1ஆம் பிரதிவாதியும் பன்னிர்செல்வமும் தலா 43 செண்ட்ம் அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.